# ஸ்ரீதேவி குமாரி மகளிர் கல்லூரி

தேசிய தரமதிப்பீடு 'B' தரச்சான்று பெற்றது
குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்றது
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சுசீந்திரம் நிர்வாகத்திற்கு உட்பட்டது

## தமிழ்த்துறை

## அகரம் செந்தமிழ் மையம் – இங்கிலாந்து

(தமிழ்க்கல்வி மற்றும் நுண்கலைகளுக்கான மேம்பாட்டு நிறுவனம்)

## நியூ செஞ்சுரி பதிப்பகம், சென்னை

## இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்

# சான்றிதழ்

செல்வன் / செல்வி / திரு / திருமதி / முனைவர் / பேரா. நா. ரா. ஷிபஜா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு.

**தமிழ் இலக்கியங்களில் வைதீகச் சமயக் கருத்தியல்கள்** எனும் பொருண்மையில் 11-11-2022 அன்று நடந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பண்டைத்தமிழ் இலக்கியத்தில் முருகன் வழிபாடு எனும் தலைப்பில் கட்டுரை வாசித்து சிறப்பித்தமையைப் பாராட்டி சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அ. லதா மகேஸ்வரி
முனைவர் அ. லதா மகேஸ்வரி
ஒருங்கிணைப்பாளர்
தமிழ்த்துறைத் தலைவர்

மு. உஷா
முனைவர் மு. உஷா
முதல்வர் (பொறுப்பு)

Sasithabalamurugan
முனைவர் சசிதா பாலமுருகன்
இயக்குநர்
அகரம் செந்தமிழ் மையம்

# தமிழ் இலக்கியங்களில் வைதீகச் சமயக் கருத்தியல்கள்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)




<u>பதிப்பாசிரியர்</u>

**முனைவர் அ.லதா மகேஸ்வரி**

தமிழ்த்துறைத் தலைவர்,

ஸ்ரீ தேவிகுமாரி மகளிர் கல்லூரி,

குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்,

தமிழ்நாடு

# தமிழ் இலக்கியங்களில்
# வைதீகச் சமயக் கருத்தியல்கள்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்
**முனைவர் அ.லதா மகேஸ்வரி**
தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ தேவிகுமாரி மகளிர் கல்லூரி,
குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.
தமிழ்நாடு

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Thamizh Ilakkiyangalil**
**Vaitheeka Samaya Karuthiyalgal**
**(Pannattu Karutharanga Aaivu Katturaigal)**

Edited by : **Dr.H.Latha Maheswari**

First Edition : November, 2022

Copyright : Publisher

No. of pages : 156

Publisher :

**New Century Book House Pvt. Ltd.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 050.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Online : www.ncbhpublisher.in

ISBN. 978-81-2344-361-4

Code No. A4715

**₹ 220/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027
**Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371
**Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452 2344106, 4374106
**Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667
**Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387
**Ooty** 0423 - 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
**Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652 - 234990

**தமிழ் இலக்கியங்களில்**
**வைதீகச் சமயக் கருத்தியல்கள்**

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர் : முனைவர் அ. லதா மகேஸ்வரி

முதல் பதிப்பு : நவம்பர், 2022

அச்சிட்டோர்: பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
18 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# வாழ்த்துரை

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
 விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
 பிறந்தோம் நாங்கள்'

எனும் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகள் செப்புவது போல் உலகின் தொன்மையான மொழி தமிழ்மொழி. செம்மொழித் தகுதி பெற்ற தமிழ்மொழியைப் பக்தியின் மொழி என்பர்.

பரம்பொருளை அடைவதற்கான வழிகாட்டுதல் தான் சமயங்களும் கடவுள் குறியீடுகளும் பக்தி நெறியும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகின்றமையைக் காணலாம். சங்ககாலந்தொட்டே நிலவி வந்த சைவ, வைணவ சமயக் கோட்பாட்டுச் சிந்தனைகள், நாயன்மார்கள், ஆழ்வார்களின் பக்திப் பரவசம், இறைவனின் அருட் செயல்கள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றைத் தமிழ் இலக்கியங்கள் மிகவும் சாதுர்யமாகப் பறைசாற்றுகின்றன.

கடவுள் வழிபாடு என்பது வெறும் சடங்கு சம்பிரதாயங்கள் அல்ல. அகநிலைப் பயிற்சிகள் மூலம் ஆன்மா தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ளவும் மனதில் படியும் மாசுகளை அகற்றி தூய்மையாக்கிக் கொள்வதற்காகவும் தான்; இவைகளையே இலக்கியங்களும் மக்களுக்குப் போதித்து நல்வழி காட்டின.

'தமிழ் இலக்கியங்களில் வைதீகச் சமயக் கருத்தியல்கள்' என்ற பொருண்மையில் நடத்தப்படும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் சங்க இலக்கியம் முதல் பிற்கால இலக்கியம் வரை உள்ள வைதீகச் சமயக் கருத்துகளை வெளிக்கொணர ஒரு நன் முயற்சியாகும்.

# பொருளடக்கம்


1. சீவகசிந்தாமணியில் வைதீகச் சிந்தனைகள்
முனைவர் ப.ஆனந்த நாயகி 13

2. திருமால் அருள் வேட்டல் காட்டும் இறைக்கருத்தியல்
முனைவர் ஜா.ஜூலி பிரதிபா 16

3. கவிஞர் ஜான் பால்மரின் படைப்புகளில் தன்னாக்கத் தேவியல் 24
இரா.ரேகாள்

4. அழகர்மலை அழகர்
முனைவர் அ.லதா மகேஸ்வரி 30

5. சங்ககாலப் பொருளுற்பத்தி முறைகளின்
இரு கூறுகளும் வணிகமுறைமையும்
முனைவர் ச.பாரதி 39

6. பெரியாழ்வார் பாசுரங்களில் அணிகலன்கள்
சௌ.பிருந்தா 51

7. பெரியபுராணத்தில் பூசலாரின் இறைப்பணி
முனைவர் செ.பிரீடா 56

8. சுவடி கூறும் மேக நோய் அகமருந்துகள்
P.J.ஜெமிஜோண் 61

9. சங்க இலக்கியத்தில் தமிழர் அல்லாத குடிகள்
கி.ஜெனார்லின் 65

10. சங்க இலக்கியம் வழியாக வெளிப்படும்
குறிஞ்சி நில வேலன் வெறியாட்டு
ஜினிமோள்.க 69

11. இளையான்குடி மாறநாயனாரின் பிறவா பேரின்பம் 73
முனைவர் அ.மலர்விழி

12. பக்தி இலக்கியத்தில் சைவ இலக்கியம்
முனைவர் ச.வே.மினி 77

13. சித்தர் பாடல்களில் வைதீகச் சமயச் சிந்தனைகள் 83
திருமதி P. நிர்மலா

14. சங்கத் திணைப் பகுப்பில் முல்லைநில மக்களின் வாழ்வியல் 90
மா.நிஷா
15. THE CONCEPT OF BHAKTHI IN PERIYAPURANAM 96
S.Raveena
16. மானுடம் வளர்க்கும் சைவ சித்தாந்தம் 100
முனைவர் சசிதா பாலமுருகன்
17. பழந்தமிழ் இலக்கியத்தில் முருகன் வழிபாடு 107
முனைவர் நா.ரா.ஷிபஜா
18. தமிழ் இலக்கியங்களில்
வைதீகச் சமயக் கருத்தியல்கள் - பக்தி இலக்கியம் 112
ரா.சித்திக்
19. கம்பராமாயணத்தில் கம்பரின் வைணவ சமயக் கட்டுக்கோப்புகள் 117
சை.சுஜிஷ்
20. சிவவாக்கியர் பாடல்கள் உணர்த்தும் இறைக்கோட்பாடு 127
ரா.சுஜிதா
21. திருவேங்கடத்தந்தாதியில் வைணவ சமயச் சிந்தனைகள் 133
திருமதி ம.உமாதேவி
22. சங்க இலக்கியங்களில் முருகன் வழிபாடு 139
ஆ.அக்ஸீலியா அனுலா
23. திருமுருகாற்றுப்படை வழி அறியலாகும்
முருகனின் ஆறுபடை வீடுகளின் சிறப்புகள் 146
பா.பியூலா
24. சைவவைஷ்ணவ மதங்கள் 153
Dr. Shinee Das Y

# 17. பழந்தமிழ் இலக்கியத்தில் முருகன் வழிபாடு

**முனைவர் நா.ரா.ஷிபஜா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
முஸ்லிம் கலைக் கல்லூரி,
திருவிதாங்கோடு.

## முன்னுரை

வாழ்த்துப் பொருளாக மட்டுமின்றி வாழ்வுப் பொருளாகவும் இறைவனைக் கொண்டவர் தமிழர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஐவகை நிலத்துக்கும் அடிப்படையாக அமைந்த கருப்பொருள்களைக் கொண்டு அவற்றுள் முதற் பொருளாகத் தெய்வத்தைக் குறித்தனர். எப்பொருளிலும் தங்கியிருத்தலால் 'இறைவன்' எனவும் அனைத்துப் பொருளிலும் இருந்து அவற்றை இயக்கும் ஆற்றலுடைமையான் கடவுள் எனவும், மனம் மொழி மெய்களைக் கடந்து நிற்பதால் கடவுள் எனவும் வெவ்வேறு பெயர்களால் ஆண்டவனை அழைத்தனர்.

'அரிதரிது மானிடராதல் அரிது' என்றாங்கு ஏனை உயிர்களை விட மனிதராகப் பிறப்பது மேலானது என்பர் ஔவையார். வள்ளுவர்,

**"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

**(திருக்குறள் டாக்டர் பெ. கிருஷ்ணன் பாடல் எண் 2)**

மெய்யறிவனாகிய இறைவனின் திருவடிகளைத் தொழாதார் என்றால் கற்றதால் ஆகிய பயன் என்ன என்பதை வள்ளுவர் விளக்குகிறார்.

## பழந்தமிழ் இலக்கியத்தில் முருகன்

"இன்று நீ அன்று நான்" என்னுமளவுக்கு முருகனுக்குத் தமிழோடு தொடர்புண்டு. செவ்வேளின் பெருமையைப் பேசாத செந்தமிழ் நூலேது இன்று கிடைக்கும் தமிழ் நூல்களுள் தொன்மையானதான தொல்காப்பியம் சேயோன் மேய மைவரை உலகம் என குன்றுதோறாடும் குமரனைக் குறிக்கிறது. பத்துப்பாட்டின் முதற்பாட்டு தமிழர் வாழ்வோடு முருகன் ஒன்றி நிற்பதைக்காட்டி அப்பெருமானிடம் அடியாரை ஆற்றுப்படுத்துகிறது. வேலவனின் பிறப்பையும் வெற்றிச்சிறப்பையும் பரிபாடல் சிறக்கப் பேசுகிறது.

ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்கத் தொகை நூல்களிலும், குமரனைப் பற்றிய

குறிப்புகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களும் சேவற்கொடியோனின் மாட்சியைக் கூறுகின்றது. சிவனார் பெருமை கூற எழுந்த நால்வர் திருமுறைகளிலும் சிவனடியார் சிறப்புணர்த்த எழுதப்பட்ட பெரியபுராணத்திலும் முருக வேளின் பெருமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வேலன் வெறியாடல்

ஏனைய நிலத் தெய்வங்களான திருமால், வருணன், இந்திரன் ஆகியோரைக் காட்டிலும் முருகனே சிறப்பாகப் பேசப்படுவதைச் சங்கப் பாடல்களில் காணலாம்.

தலைவன் மேல் காதல் கொண்டு துயரில் வாடும் தலைவியின் மேனி வருத்தம் கண்டு அதற்குக் காரணம் தெரியாது முருகனது பூசாரியாகிய வேலனை அழைத்து வெறியாடுவாள் அவளுடைய தாய். வெறியாடும் நிகழ்ச்சி அகப்பாடல்கள் பலவற்றிலும் குறிக்கப் பட்டுள்ளது.

**“அறுவை தோயும் ஒருபெருங் குடுமி**
**சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்**
**ஆகுவ தறியும் முதுவாய் வேல**
**கூறுக மாதோ நின் கழங்கின் திட்டம்”**

**(அகநானூறு முனைவர் சு,ப அண்ணாமலை பா.எண் 195)**

என்று வேலவன் கழங்கைப் பயன்படுத்திய நிலை பேசப்படுகிறது. வெறியாடிய காமக்கண்ணியார் வெறியாடலை இரண்டு பாடல்களில் விளக்குகிறார். வெறியாடுவதற்குக் களம் ஒன்று அமைத்து மாலை சூட்டி இறைவனைப் போற்றிப்பாடிப் பலிகொடுத்துத் தினையைக் குருதி யோடு தூவி வெறியாடிய நிலையை ஒரு பாடலில் விளக்குகிறார்.

“களம் நன்கு இழைத்து கண்ணி சூட்டி,
வளநகர் சிலம்பப்பாடி பலிகொடுத்து,
உருவச் செந்தினை குருதியொடு
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு
நடுநாள் தூ உய்”.

(அகநானூறு முனைவர் சு,ப அண்ணாமலை பா.எண் 22)

என்பது அவர் கூற்று. அவர் மற்றொரு பாடலில் கூடுகொள் இன்னியம் கறங்கப் பெரும் பந்தர்க் கீழ் வெண்போழ் கடம் பொடுசூடி இன்சீர் ஐதமை பாணி இசைத்து முருகனைப் போற்றி வெறியாடிய செய்தியைப் பாடுவார். மலர்கள் உதிர்ந்துள்ள இடத்தைக் குறிப்பிடும் போது வேலன் வெறியாடும் களம் போல காட்சியளிக்கிறது என உவமை கூறப்படுகிறது.

## முருகு சொற்பொருள்

முருகு என்பது இளமை, இனிமை, அழகு, உயர்வு, தெய்வத் தன்மை விழா எனப் பலபொருள் தரும் ஒரு பொதுச் சொல்லாகும். முருகன் அவ்வுயர் பண்புகள் பலவற்றின் உறைவிடமாகத் திகழ்பவன் என்பதைப் பின்வரும் சான்றுகளாலறியலாம்.

"பவளத்தன்ன மேனி திகழ்
ஒளி சேவலங் கொடியோன்".
(குறுந்தொகை. டாக்டர் உ.வே.சா பாடல் கடவுள் வாழ்த்து)

"பலர்புகழ் ஞாயிறு கடற்கண் பாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி"
(பத்துப்பாட்டு. திருமுருகாற்றுப்படை பாடல் வரி 2-8)

"உருவும் உருவத் தீ யொத்தி முகனும்
விரிகதிர் முற்றா விரிசுடர் ஒத்தி"
(பரிபாடல். முனைவர் இரா. சாரங்கபாணி பாடல் வரி 19)

தன்னுடைய ஆற்றலால் உலகோரது சிந்தை கவர்ந்தவன் சிங்காரவேலன். தமிழும் எத்திசையும் புகழ் பரப்பிப் பன்னாட்டறிஞர் தம் இதயங்கவர்ந்த மொழியாகத் திகழ்கிறது. வெறியாட்டு எனவும் குன்றக் குரவை எனவும், வேலனுக்கு விழா எடுத்து மகிழ்ந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. பண்டைய காலத்தில் சங்கம் வைத்தும் இந்நாளில் உலகத் தமிழ் மாநாடுகள் கூட்டியும் தமிழுக்கு விழாக் கொண்டாடி மகிழ்ந்த செய்தி வெள்ளிடை மலையாகும். முன்புப் பழம்பொருட்கும் முன்னை பழம்பொருளாய் மூவர் முத்தமிழும் பழமைக்கும் பழமையாகவும் புதுமைக்கும் புதுமையாகவும் திகழ்கிறது. எங்கெல்லாம் தமிழர் உண்டோ அங்கெல்லாம் தமிழ் உண்டு. முருகனும் உளன். தமிழர் கடல் கடந்து வாழும் நாடுகளிலும் குமரனுக்குக் கோவிலுண்டு.

## முருகனது தமிழ் விருப்பு

சிவனார் உளங்குளிர உபதேச மந்திரப் பொருளுரைத்த சுவாமிநாதன். தலைச்சங்கத்தே அமர்ந்த தமிழாய்ந்த புலவன் மூவாத் தமிழ்ப் பயந்த முன்னூல். முனிவன் அகத்தியனுக்குத் தமிழறிவுறுத்திய தமிழாசான் அடியார்கள் கூறும் தமிழ் கேட்க அவாவுறும் தமிழன்பன். தேனென்று பாகென்று உவமிக் கொணா மொழித் தேவியரைவிட்டுத் திருமுருகாற்றுப்படை கேட்பதில் பெருவிருப்புற்று நக்கீரரிடம் ஓடோடி வந்தவன் மங்கை ஒருத்தி தரும் சுகமும் மாத்தமிழுக் கீடில்லை என

உணர்த்திய மாமயிலோன்; கலியுகக் கடவுளாம் கந்தன் மாட்டுக் காரவேலனாய் ஒளவைக்குச் சுட்ட பழம் ஈந்தும் பொய்யாமொழிப் புலவரிடம் முட்டை எனப் பெயர் தாங்கியதும். மதுரையில் உப்பூரிகுடி கிழார்மகன் உருத்திரசன் மகனாய்த் தோன்றி இறையனாரகப் பொருளுரையின் சிறப்பினை யுணர்த்தியதும் அருணகிரியாருக்கு அருள்காட்டித் திருப்புகழ் செவிமடுத்தும், கச்சியப்பருக்குக் கந்தபுராணம் பாட அடியெடுத்துக் கொடுத்ததும் குமரகுருபரரின் ஊமைத்தன்மையை நீக்கிக் கந்தர் கலிவெண்பா பாடவைத்தும், தமிழை விட்டகலா விருப்பின் விளைவன்றோ. இவ்வாறு செந்தமிழுக்கும் செவ்வேளுக்கும் என்றென்றும் நீங்காத தொடர்புண்டு.

கொட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் கொட்டுப்படு என்றாங்கு திட்டுப்பட்டாலும் தீந்தமிழால் திட்டப்பட வேண்டும். தமிழினிமை திட்டின் வன்மையைக் குறைத்துவிடும். தித்திக்கும் செந்தமிழில் 'பித்தனே' எனச் சுந்தரர் திட்டியது சிவனரர்க்கு இனித்தனாலன்றோ அவர் சொற்றமிழ் பாடு அஃதே எனக்கு அர்ச்சனை என்றார். வையுந் தமிழைக் கேட்டும் வாழவைக்கும் அரன் மகனா வாழ்த்தும் தமிழ் கேட்க மறுப்பான் இனியாவது என்றும் வாடாத் தமிழ்ப் பாமாலை கொண்டு வள்ளி மணாளனை வழிபடுவதே தமிழர் கடவுள்.

**காதலும் வீரமும்- களவும் கற்பும்**

அகப்புறப்பாட்டு தமிழுக்கே உரியது. வீரத்தைக் காட்டித் தெய்வயானையையும், காதலைப் பொழிந்து வள்ளியம்மையையும் மணந்து கொண்டவர் முருகப்பெருமான். முன்னது பெற்றோர் முடித்து வைத்த மணம் கற்பு நெறி சார்ந்தது. பின்னது தானே தேடிக் கொண்டது களவு நெறிப்பட்டது.

**தமிழான உருவமே தண்டபாணி**

செய்தவமாக நிற்கும் செவ்வேள் தமிழாகவும் நிற்கிறான் அமிழ்தான உயிரெழுத்து 12. அதுபோல குமரனுடைய அழகான கருவிகள் 12. ஈராறு கரத்தோடு ஓராறு சிரம்சேர்த்தால் எண்ணிக்கை வருவது 18. சீராக இனம் பிரித்தால் செந்தமிழ் மெய்யெழுத்து நேராக வருவது 18. முருகன் கையிலுள்ளது வேலாயுதம். தமிழுக்குள்ளது ஆய்த எழுத்து இரண்டும் இலை வடிவின் முன்னது அசுரரைக் கொன்று அமரரைக் காக்க உதவியது. பின்னதோ தமிழில் வந்து கலந்து அம்மொழியை அழிக்க முற்படும். பிறமொழி ஒலிகளை நீக்க உதவுகிறது.

## குறிஞ்சிக் கிழவன்

மலையே மக்கள் வாழ்வைத் தொடங்கிய கடவுட் கொள்கையில் முதலிடம் பெறுபவன் முருகனே. அரும்பெறல் மரபில் வந்த பெரும் பெயர் முருகனை அம்மலையுறை மைந்தனை வழிபட்டால், சிவன், உமையவள், கணபதி திருமால் எனும் பிற தெய்வங்கள் யாவற்றையும் வழிபட்டதாகும். இதனாலன்றோ "சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சிய தெய்வமில்லை" எனும் முதுமொழி எழுந்தது" உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன் பின்னை ஒருவரை யான் பின் செல்லேன்" என நக்கீரர் உறுதி கூறுகிறார்.

## முடிவுரை

அங்கை நெல்லியெனக் கண்ணெதிரே தோன்றும் பொருள் களையும் மறுத்துரைக்குங்காலமிது. இக்காலத்திலும் செந்தமிழ்த் தெய்வமாகிய முருகன் பலருக்குக் கண்கண்ட தெய்வமாக இளநலம் காட்டிக் காட்சி தந்து அவர்தம் மனத்தகத்தே மன்னி நின்று அடியார்க்கு இடையூறு வராது காத்து, அவர் தம் வாழ்வை ஊருணி நீராய் பழு மரமாய்ப் பல்லோர்க்கு உதவுமாறு நிறைவு பெறச் செய்திருப்பதிலிருந்து அவன் தோன்றாத் துணையாக இருப்பதை உணரலாம்.

வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈவதில் வல்லவன் இறைவன் ஒருவனே. வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட" என முருக வழிபாட்டின் பயனைத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது." நீருண்டு பொழிகின்ற காருண்டு" எனும் வள்ளலார் பாடல் முருக பக்தர்கள் அடையும் பேறுகளை வரிசைப்படுத்திக் கூறுகிறது. கல்வி மேம்பட, செல்வம் செழிக்க, குடி தழைக்க, வீரம் விளைய, வெற்றி கிட்ட, ஞானம் தலைப்பட, முக்தியடைய முத்தையனைப் பன்னெடுங்காலமாக ஆன்ற தமிழ்ச் சான்றோர் ஆராக் காதலொடு வழிபட்டு வந்துள்ளனர். என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.

## துணைநின்ற நூற்கள்


1. டாக்டர் கிருஷ்ணன், பெ. திருக்குறள், முதற்பதிப்பு ஆகஸ்டு 2003. பாவை பப்ளிகேஷன்ஸ், வெளியீடு
2. டாக்டர் உ.வே.சா எழுதிய உரை, குறுந்தொகை, முதற் பதிப்பு 2009. டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் சென்னை.
3. முனைவர் சுப அண்ணாமலை, சு.ப., அகநானூறு (இரண்டாம் பகுதி), முதற்பதிப்பு செப்டம்பர் 2004. கோவிலூர் மடாலயம் கோவிலூர் - 307.
4. முனைவர் இரா. சாரங்கபாணி, இரா., பரிபாடல், முதற் பதிப்பு ஏப்ரல் 2003
5. வித்துவான் நாராயண வேலுப் பிள்ளை, ஆ., பத்துப்பாட்டு, முதற்பதிப்பு 1994)